# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S. No. 215/2018

சாட்சி : DW-2

பெயர் : திரு. ரவிச்சந்திரன் தேதி : 27.07.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:- ( வாதி தரப்பில்)

இவ்வழக்கு வாதியும், 4ம் பிரதிவாதியும் எனது மகன்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் 14.09.1987ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படிக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் நானும், என் தகப்பனார் மற்றும் சகோதரரும் செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கு சி ஷெடியூலாக சொத்துகள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சி ஷெடியூலில் தார்சு வீடும், காலிஇடமும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி அந்த சொத்தின் சுவாதீனத்தை நான் அடைந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நானும், எனது மகன்களும் கூட்டாக தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தகளில் எனக்கு 1/3 பாகமும், வாதிக்கு 1/3பாகமும், 4ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 10.01.2008ல் ஒரு ரத்தினம் மனைவி புவனேஸ்வரி என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரம் எழுதிக்கொடுக்கும்போது வாதி மைனராக இருந்தார் என்றால் சரிதான். மைனருக்கு உண்டான பாகத்தை பொறுத்து பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரத்தை அனுசரித்து புவனேஸ்வரி 3ம் பிரதிவாதி அய்யந்துரைக்கு சொத்தை கிரயம் கொடுத்துவிட்டார் என்றால்

R Velaras Digitally signed by R Velaras Date: 2026.07.27 13:05:49 +0530

I Additional District Judge,
Salem

சரிதான். புவனேஸ்வரி அய்யந்துரைக்கு கிரயம் கொடுத்த காலரத்திலோ, நான் புவனேஸவரிக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தபோதும் பணம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். வாதிக்கு உண்டான 1/3 பாகத்தை கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் பெயரளவிற்கு பொது அதிகார பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றும், அது வாதியை கட்டுப்படுத்தாதுஎன்றும் சொன்னால் சரிதான். வழக்கு சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான். எனவே வழக்கில்  கோரியுள்ள தீர்ப்பாக வேண்டும் என்றால் சரிதான்.  வழக்கு சொத்தில் நாங்கள் வாடகைக்கு இருப்பதாக சொன்னால் அது தவறாகும்.

**<u>குறுக்குவிசாரணை</u>:-** (  5 மற்றும் 8ம் பிரதிவாதிகள்  தரப்பில்)

பிரதிவாதிகளின் தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.07.27 13:05:55 +0530

I Additional District Judge,
Salem